

# கடைகளில் அடையாளப் பலகை சர்ச்சையை நிறுத்துக

**கோலாலம்பூர், டிச. 1-** வர்த்தக மையங்களில் உள்ள அடையாளப் பலகை தொடர்பில் கோலாலம்பூர் மாநகர மன்றம் மேற்கொண்டிருக்கும் அமலாக்க நடவடிக்கை குறித்து சர்ச்சை எழுப்புவதை அரசியல்வாதிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று பிரதமர்துறையின் கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேற்று முன்தினம் வலியுறுத்தினார்.

சமுதாயத்தின் அமைதியையும் நீதியையும் உறுதி செய்வதற்காக அமல்படுத்தப்பட்டிருக்கும் சட்டங்களையும் விதிமுறைகளையும் மலேசியா தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஆகவே யாராக இருந்தாலும் சரி இந்தச் சட்டங்களையும் விதிமுறைகளையும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

1982ஆம் ஆண்டு (கூட்டரசுப் பிரதேசம்) விளம்பரம் தொடர்பான துணை விதிகள் 1976ஆம் ஆண்டு ஊராட்சி சட்டங்கள் வாயிலாக கடைகளின் அடையாளப் பலகைகளில் தேசிய மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கோலாலம்பூர் மாநகர மன்றம் வலியுறுத்தி வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

தேசியமொழி எழுத்துகளுக்கும் வார்த்தைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மற்ற மொழிகளின் எழுத்துகள் அல்லது வார்த்தைகளைவிட தேசிய மொழியின் வார்த்தைகளும் எழுத்துகளும் அளவில் பெரிதாக இருக்க வேண்டும் என்று அவர் நினைவுறுத்தினார்.

கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் அனுமதியைப் பெற மனுச் செய்வதற்கு அடையாளப் பலகைகளுக்கான எழுத்துகளும் வார்த்தைகளும் டேவான் பகாசா டான் புஸ்தாகாவின் உறுதிச் சான்றிதழைக் கட்டாய ஆவணமாக முதலில் பெற வெண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜாலான் சீலாங்கில் மினி டாக்கா எனும் பிரச்சினை தலைதூக்கியது முதல் இந்த முடிவில் கோலாலம்பூர் மாநகர மன்றம் உறுதியாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.